# கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக உள்ளுராட்சி ஆணையாளரிடமிருந்து பெறவேண்டிய ஆயுர்வேத உதவி நிதியான ரூபா 100,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மார்ச் 15 ஆம் திகதி ரூபா 6,710,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட கப் வண்டியின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கு பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,133,538 தொகையான போதிலும் இதற்கு உரித்தான

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) வீதவரியும் வரியும் | | | |
| (ii) வாடகை | | | |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணம் | | | |
| (iv) ஏனைய வருமானம் | | | |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| (i) நீதிமன்ற தண்டப்பணம் | |
| (ii) முத்திரைக் கட்டணம் | |

07 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்த ரூபா 17,820,992 தொகையான பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளம்பரப் பலகைக் கட்டணம்**

சபையின் அங்கீகாரம் பெறப்படாது விளம்பரப்படுத்தப்பட்ட 05 விளம்பரப் பலகைகளுக்காக ரூபா 15,600 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சுற்றாடல் கட்டணம்**

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஏற்பாடுகளின் பிரகாரம் கைத்தொழில்கள் புதிதாக ஆரம்பிக்கையில்

முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 641,119 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் 04 நூலகங்களில் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் பல்வேறு காரணங்களால் பாதிப்பிற்குள்ளான மற்றும் காணாமற் போன 236 புத்தகங்களுக்கு உரித்தான ரூபா 37,035 பெறுமதியை அறவிடுவதற்கோ அல்லது வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு கணக்குகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு